## முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

அசல் வழக்கு எண்.1001/2023 இ.ம.எண்.

எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ந் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சியின் **பி.வா.சா.3**-ன் வாக்குமூலம் 1989-ம் ஆண்டு 19-வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.K.P.இளவரசி, முதன்மை சார்பு நீதிபதி, ஈரோடு அவர்களால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணகுமார் | வட்டம் | : | |
| த/பெ | : | பாலகிருஷ்ணன் | மாவட்டம் | : | |
| க/பெ | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**பி.வா.சா. 3 : முதல் விசாரணை:-**

எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரப்பெற்று, அன்றைய தேதியில் நான் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால், பிடியாணை பிறப்பிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் நான் நீதிமன்ற அமீனா மூலம் சாட்சியம் அளிக்க ஆஜர்படுத்தப்பட்டேன். வாதி ஜெயலட்சுமி எங்களது கடையில் கடன் 3 1/2 ஆண்டு காலமாக பணிபுரிந்து வந்தார். இந்த வழக்கின் வாதி பெரியார் நகரில் உள்ள எங்கள் கடையின் கிளையில் வேலை பார்த்து வந்தார். காலை 09.30 மணி முதல் இரவு 07.30 மணி வரை பணியில் இருப்பார். வாதி கடந்த 28.07.2022-ம் தேதி எங்களது கடையில் பணிபுரிந்தாரா என்றால், அந்த மாதம் முழு சம்பளம் பெற்றுள்ளார், விடுப்பு எடுத்திருந்தால், அந்த நாட்களுக்குரிய சம்பளத்தை பிடித்தம் செய்திருப்பேன். ஜூலை மாதத்திற்கான சம்பளம் ரூ.12,150/-

ஆகஸ்டு மாதம் பெற்றார். அதன் விபரம் அடங்கிய பட்டியல் **சா.சா.ஆ.**2 ஆகும். பணியில் சேர்ந்தபோது, ரூ.8 ஆயிரம் மாத சம்பளம் கொடுத்தேன். அவர் வேலையிலிருந்து நின்ற சமயத்தில் ரூ.15 ஆயிரம் மாத சம்பளம் பெற்று வந்தார். வாதி 31.01.2025-ம் தேதிக்கு பின் வேலைக்கு வரவில்லை. அவராக நின்று விட்டாரா என்றால், இல்லை, சொல்லிவிட்டு தான் நின்றார்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளீர்களா என்றால், பிடியாணை பிறப்பிக்கப்பட்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கில் நான் 3-ம் நபர் ஆவேன். வழக்கு சங்கதிகள் எனக்கு எதுவும் தெரியாது. நான் துளிர் பேபி ஷாப் வைத்துள்ளேன். வாதிக்கு நீங்கள் சம்பள பணத்தை அவரது வங்கி கணக்கில் செலுத்தினீர்களா என்றால், இல்லை, ரொக்கமாக தான் கொடுத்து வந்தேன். அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், இல்லை. வாதிக்கு கொடுக்கப்பட்ட சம்பளத்தில் பிடித்தம் ஏதாவது செய்தீர்களா என்றால், இல்லை. வாதியின் சம்பளத்தை தவிர அவருக்கு வேறு தனிப்பட்ட வருமானங்கள் இருந்ததா என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு சம்பளத்தை தவிர போனஸ் கொடுப்பதுண்டு என்றால், தீபாவளி சமயத்தில் கொடுத்தேன். வாதிக்கு இறுதியாக கொடுத்த சம்பளம், தற்போது சரிபார்த்ததில் ரூ.13 ஆயிரம் ஆகும்.